

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமது சகி,மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன், முன்னாள் எம். எல். ஏ. அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஏ. ஜி. ஆறுமுகம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாவட்ட துணை செயலாளர் பிரபாத்குமார்,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கீழ்பென்னாத்தூரில் உள்ள காவல் நிலையம் எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை தாங்கினார். உடன் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா முன்னிலையில் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கண்டன முழக்கமிட்டனர்.

### ஆண்டிபயாடிக் மருந்துகளின் எச்சங்களால்

# இந்திய இறால் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறதா?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 6 –

தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக் மருந்துகளின் எச்சங்கள் காரணமாக இந்திய இறால் ஏற்றுமதி சரக்குகள் வெளிநாடுகளால் நிராகரிக்கப்படுவது, அதனால் ஏற்பட்ட நிதி இழப்பு, சட்டவிரோத ஆன்டிபயாடிக் பயன்பாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாட்டில் சிறு அளவிலான இறால் வளர்ப்போருக்கு வழங்கப்படும் ஆதரவு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, 2025 மார்ச் மாதம் முதல் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட முக்கிய சந்தைகள் தடை செய்யப்பட்ட நைட்ரோஃப்யூரான்கள், குளோராம்பெனிகால் போன்ற ஆன்டிபயாடிக் எச்சங்கள் காரணமாக எத்தனை இந்திய இறால் ஏற்றுமதி சரக்குகளை நிராக ரித்துள்ளன? அதனால் ஏற்பட்ட நிதி இழப்பு எவ்வளவு? தடை செய்யப்பட்ட கால்நடை மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதால் அவை இறால் வளர்ப்பில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? மாநில மற்றும் மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், விதிக்கப்பட்ட அபராதங்கள் மற்றும் அமலாக்க நடவடிக் கைகள் என்ன? மேலும், தமிழ்நாட்டில் சிறு அளவிலான இறால் வளர்ப்போருக்கு தரமான ஆன்டிபயாடிக் இல்லாத தீவனம், தரமான குஞ்சுகள் மற்றும் SHAPHARI சான்றிதழ் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உதவி என்ன? என்று கேள்வி எழுப்பினார்.



இதற்கு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் (லாலன் சிங்) எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் :

2025 மார்ச் முதல் இதுவரை, தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக் எச்சங்கள் கண்டறியப்பட்ட தால் மொத்தம் 35 இந்திய இறால் ஏற்றுமதி சரக்குகள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளால் நிராகரிக்கப்ப ட்டுள்ளன. இதில் அமெரிக்கா 22 சரக்குகள் (336.79 மெட்ரிக் டன்; ரூ.26.01 கோடி), ஐரோப்பிய ஒன்றியம் 9 சரக்குகள் (145.21 மெட்ரிக் டன்; ரூ.9.49 கோடி), ஜப்பான் 3 சரக்குகள் (45.54 மெட்ரிக் டன்; ரூ.3.06 கோடி), ரஷ்யா 1 சரக்கு (20 மெட்ரிக் டன்; ரூ.1.341 கோடி) ஆகியவை அடங்கும். மொத்தமாக *547.54 மெட்ரிக் டன் மதிப்பிலான ரூ.39.901 கோடி ஏற்றுமதி சரக்குகள் நிராகரிக்க ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக் மருந்துகளின் சட்டவிரோத விற்பனை மற்றும் தவறான பயன்பாட்டைத் தடுக்க மத்திய அரசு பல்வேறு ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

Coastal Aquaculture Authority (CAA), 2023ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ், கடலோர மீன்வள வளர்ப்பில் பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்தியல் செயற்பாட்டு பொருட்களின் பட்டியலை 75 ஆக விரிவுபடுத்தியுள்ளது. மேலும், குளோராம்பெனி கால், நைட்ரோஃப்யூரான் உள்ளிட்ட மருந்துகளின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனைக்கு தடை விதிக்க ப்பட்டுள்ளதாகவும், மனிதர்களுக்காக ஒதுக்கப்பட்ட 37 வகை நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை இறால் மற்றும் மீன்வள வளர்ப்பில் பயன்படுத்தவும் தடை விதிக்கப்ப ட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆன்டிபயாடிக் பயன்பாட்டைக் கண்காணிக்க அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்க ளிலும் Antibiotic Task Force அமைக்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அனைத்து கடலோர மாநிலங்களும் இந்தப் பணிக்குழுக்களை அமைத்துள்ளன. இருப்பினும், மாநில அல்லது மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், விதிக்கப்பட்ட அபராதங்கள் மற்றும் அமலாக்க நடவடிக்கைகள் குறித்த மையப்படுத்தப்பட்ட தரவுத் தளம் மத்திய அரசிடம் இல்லை என்றும் பதிலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், ஏற்றுமதி ஆய்வுக் கவுன்சில் (EIC), ஆன்டிபயாடிக் தொடர்பான ஒவ்வொரு விதிமீறல் சம்பவத்தையும் விசாரித்து, காரணங்களை கண்டறிந்து சரிசெய்யும் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து சரக்குகளும் 100 சதவீத பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. மீண்டும் மீண்டும் விதிமீறலில் ஈடுபடும் நிறுவனங்கள், திருத்த நடவடிக்கைகள் நிறைவேறும் வரை தற்காலிகமாக கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறு அளவிலான இறால் வளர்ப்போருக்கு பிரதமர் மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் 37 நர்சரி/விதை வளர்ப்பு குளங்கள் (ரூ.2.59 கோடி), ஒரு நோய் கண்டறிதல் மற்றும் தரப் பரிசோதனை ஆய்வகம் (ரூ.40 லட்சம்), 7 மீன் தீவன ஆலைகள் (ரூ.5.20 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஆன்டிபயாடிக் இல்லாத தரமான உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் CAA இதுவரை 10,109 மீன்வள உற்பத்திப் பொருட்களுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது. SHAPHARI திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 16 இறால் குஞ்சு உற்பத்தி நிலையங்களும், 392 ஹெக்டேர் இறால் பண்ணைகளும் சான்றளிக்கப்பட்டுள்ளன. இதில் தமிழ்நாட்டில் ஒரு இறால் குஞ்சு உற்பத்தி நிலையமும், 83.47 ஹெக்டேர் பரப்பளவிலான இறால் பண்ணைகளும் சான்றிதழ் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொலைதூர ரயில்களில் வழங்கப்படும்

# உணவின் தரம் - சுகாதாரம் மேம்படுத்தப்படுமா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 6 –

தொலைதூர ரயில்களில் வழங்கும் உணவின் தரம் மேம்படுத்தப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு

அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குச் சேவை வழங்கும் தொலைதூர ரயில்களில் வழங்கப்படும் தரம், சுகாதாரம் மற்றும் உணவுச் சேவைகள் குறித்து அரசு ஏதேனும் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதா, அப்படியெனில் அதன் விவரங்களை ஆண்டு வாரியாகத் தெரிவிக்கவும்;

(ஆ) மேற்கூறிய மாநிலத்திலிருந்து புறப்படும் அல்லது இந்த மாநிலத்தின் வழியே கடந்து செல்லும் ரயில்களில், அடிப்படை சமையலறைகளை (Base Kitchens) நவீனப்படுத்தவும், தரக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், தொழில்நுட்பம் சார்ந்த கண்காணிப்பை அறிமுகப்படுத்தவும் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும் அரசால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

(இ) தெற்கு இரயில்வே மண்டலத்தில் இயக்கப்படும் தொலைதூர ரயில்களில் சுகாதாரமான, சத்தான மற்றும் பாரம்பரிய தென்னிந்திய உணவு வகைகளின் கிடைப்புத் தன்மையை விரிவுபடுத்த அரசு முன்மொழிகிறதா, அப்படியெனில் அதன் விவரங்கள் யாவை;



(ஈ) ரயிலுக்குள் வழங்கப்படும் உணவுச் சேவைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பயணிகளின் கருத்துப் பெறும் வழிமுறைகள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(உ) மேற்கூறிய மாநிலத்தில் தொலைதூர ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பான, உயர்தரமான மற்றும் மலிவு விலையிலான உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக முன்மொழியப்பட்ட அல்லது முன்மொழியப்பட உள்ள அடுத்தடுத்த நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ரயில்வே இணை அமைச்சர் விரிவாகப் பதிலளித்தார்.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த பாசிச த.வெ.க. அரசைக் கண்டித்து, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகில் ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. தலைமையில் 300க்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்துகொண்டு பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பியவாறு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் உளுந்தூர்பேட்டை நகரப்பகுதி முழுவதும் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

### செயற்கை நுண்ணறிவு – இணைய பாதுகாப்புத் துறைகளுக்கு

# மாணவர்களைத் தயார் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

**புதுடெல்லி, ஆக.5-**

**செயற்கை நுண்ணறிவு (AI), தரவு அறிவியல் (Data Science), இயந்திரக் கற்றல் (Machine Learning), இணையப் பாதுகாப்பு (Cyber Security), ரோபோட்டிக்ஸ், குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆகிய துறையில் மாணவர்களை தயார் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.**

*அவரது கேள்விகள் வருமாறு:*

*நமது நாட்டில் செயற்கை நுண்ணறிவு (AI) துறையின் விரைவான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கற்றல் பாதைகள், தொடர்ச்சியான திறன் மேம்பாடு, அனுபவப் பூர்வமான கல்வி மற்றும் ஆராய்ச்சி மூலம் அறிவு உருவாக்கம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, உயர்கல்வியை நவீனமயமாக்குவதற்காக ஒன்றிய அரசு தயாரித்துள்ள செயல் திட்டம் குறித்த விவரம் தருக?*

*வழக்கமான கல்வித் திட்டங்களுடன் இணைந்து, திட்டம் சார்ந்த கற்றல் (project-based learning), தொழில் துறை ஒத்துழை ப்பு, புத்தாக்கம், தொழில் முனைவு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் ஆகியவற்றை வலுப்படுத்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களை ஊக்குவிக்க ஒன்றிய அரசு பின்பற்றும் அணுகுமுறை குறித்த விவரம் தருக?*

*வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் பயன்பாடுகளில் எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பாடத்திட்டங்களை மறுவடிவமைப்பு செய்ய வழங்கப்படும் உதவிகள் யாவை?*

*உயர்கல்வியில் செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் ஒருங்கிணைப்பதை ஊக்குவிப்பதற்காக கல்வி நிறுவனங்கள், தொழில் துறை, ஆராய்ச்சி அமைப்புகள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் மேற்கொள்ளப்படும் ஒத்துழைப்பு; மற்றும்*

*மாறிவரும் தொழில் நுட்பங்கள், வளர்ந்து வரும் வேலைவாய்ப்பு முறைகள் மற்றும் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறு ஒரு கல்விச் சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் ஏதேனும் ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளனவா? அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன?*

*இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.*

*அதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் இணை அமைச்சர் டாக்டர். சுகந்த மஜூம்தார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-*

*மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-ஐ உருவாக்கியது. NEP 2020 பல்துறை அணுகுமுறை, கற்பனைத்திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை கொண்ட பாடத்திட்ட கட்டமைப்புகள் மற்றும் திறன்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. மேலும், கல்வியை அதிக அனுபவப் பூர்வமானதாகவும், விசாரணை மற்றும் கண்டுபிடிப்பு சார்ந்ததாகவும், கற்பவர்-மையப்படுத்தப்பட்டதாகவும் மாற்றுவதற்கு கற்பித்தல் முறைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது.*

*NEP 2020-ன் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, எதிர்காலத்திற்குத் தயாரான திறமையாளர்களை உருவாக்கும் வகையில் பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும், டிஜிட்டல் உள் கட்டமைப்பை உருவாக்கவும் அரசாங்கம் முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.*



*உயர்கல்வி பாடத்திட்டங்களை மேம்படுத்துவதற்காக, அகில இந்திய தொழி ல்நுட்பக் கல்விக் கவுன்சில் (AICTE) தொழில் துறை நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்று தனது மாதிரி பாடத்திட்டங்களை மாற்றியமைத்துள்ளது. இதில் செயற்கை நுண்ணறிவு (AI), தரவு அறிவியல் (Data Science), இயந்திரக் கற்றல் (Machine Learning), இணையப் பாதுகாப்பு (Cyber Security), ரோபோட்டிக்ஸ், குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் பல தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. 2025-26 ஆம் ஆண்டில், AICTE-ஆல் அங்கீகரிக்கப்பட்ட 2100-க்கும் மேற்பட்ட நிறுவ னங்கள் AI மற்றும் பிற வளர்ந்து வரும் துறைகளில் பாடநெறிகளை வழங்கின; இதில் 2.80 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் சேருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.*

*மாணவர்களின் வேலை வாய்ப்பை மேம்படுத்தவும், தேசிய கல்விக் கொள்கை 2020-இன் (NEP 2020) நோக்கங்களை அடையவும், கல்வித்துறையில் திறன் கல்வியை ஒருங்கிணைக்க உதவும் வகையில் தேசிய கடன் கட்டமைப்பு (NCrF) வெளியிடப்பட்டுள்ளது. திறன் சார்ந்த படிப்புகள் மூலம் தேவைப்படும் மொத்தக் கடன் புள்ளி களில் அதிகபட்சமாக 50% வரை திரட்டுவதற்கு NCrF-இல் ஒரு வழிமுறை உள்ளது. மேலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கவும், கற்பவர்களிடையே திறன் தொகுப்புகளை வளர்த்து அவர்களைத் தொழில்துறைக்குத் தயார் படுத்தவும், பல்கலைக்கழக மானியக் குழு "இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான நிலையான மற்றும் துடிப்பான பல்கலைக்கழக-தொழில்துறை இணைப்பு அமைப்பு குறித்த வழிகாட்டுதல்களை" வெளியிட்டுள்ளது.*

*மேலும், AICTE-இன் 2024-25 முதல் 2026-27 வரையிலான ஒப்புதல் செயல்முறை கையேட்டில், "தொழில்நுட்ப நிறுவனங்க ளுக்கான அத்தியாவசிய மற்றும் விரும்பத்தக்க தேவைகள்" என்ற பிரிவு உள்ளது. இதில், ஒப்புதலுக்கான அத்தியாவசியத் தேவைகளாக நிறுவன -தொழில்துறை பிரிவு, நிறு வனத்தின் புத்தாக்கக் குழுவை நிறுவுதல் மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்குக் கட்டாய உள்ளகப் பயிற்சி ஆகியவை அடங்கும்.*

*மேலும், வேலை வாய்ப்பை மேம்படுத்துதல், ஆராய்ச்சியில் ஆர்வத்தை வளர்த்தல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அறிமுகம் வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன், யுஜிசி "இளங்கலை மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி/ ஆராய்ச்சி உள்ளகப் பயிற்சி வழிகாட்டுதல்களை" அறிமுகப்படுத்தியுள்ளது.*

*இதுவரை, e-Yantra திட்டம் 70,000-க்கும் மேற்பட்ட கற்பவர்களுக்கு நேரடிப் பயிற்சி (hands-on training) பெற உதவியுள்ளது.*

*மேலும், தொழில் துறைக்கும் கல்வித் துறைக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தவும், கற்பவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், கல்வி அமைச்சகம் முன்னணி தொழில் துறை கூட்டாளிகளுடன் இணைந்து 'SWAYAM Plus' தளத்தைத் தொடங்கியுள்ளது. இத்தளம் வேலைவாய்ப்பை மையமாகக் கொண்ட 500-க்கும் மேற்பட்ட பாடநெறிகளை வழங்குகிறது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, குறைக்கடத்தி (semiconductor) உற்பத்தி மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறை உள்ளிட்ட 15 துறைகளைச் சேர்ந்த 80-க்கும் மேற்பட்ட தொழில் துறை கூட்டாளிகளிட மிருந்து இப்பாடநெறிகள் தொகுக்கப்பட்டுள்ளன. தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ள 6 லட்சத்திற்கும் அதிகமானோர் SWAYAM Plus தளத்தில் இணைந்துள்ளனர்.*

*மேலும், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கற்பவர்களின் திறனை மேம்படுத்துவதற்காக 'FutureSkills PRIME' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. செயற்கை நுண்ணறிவு (AI), பெருந்தரவு பகுப்பாய்வு (Big Data Analytics - BDA) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பாடநெறிகள் இதில் இடம் பெற்றுள்ளன. உண்மையான வேலைவாய்ப்புத் தேவைகளுக்கு ஏற்ப அமையும் வகையில், தொழில் துறையினரின் ஆலோசனையுடன் இப்பாடநெறிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை, இப்போர்ட்டலில் 34 லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்; இதில் AI/BDA தொழில்நுட்பப் பிரிவில் மட்டும் 9.58 லட்சத்திற்கும் அதிகமானோர் அடங்குவர்.*

*இவ்வாறு ஒன்றிய இணை அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**தஞ்சை ஏ.வி. பதி**

**ஆகஸ்ட் 6 (1996)**



தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**